**ஏப்ரல் – 09**

# TNPSC துளிகள்

❖ தேசியப் பசுமை தீர்ப்பாயம் ஆனது, இரண்டு நாட்கள் அளவிலான 2025 ஆம் ஆண்டு தேசிய சுற்றுச்சூழல் மாநாட்டினை புது டெல்லியில் ஏற்பாடு செய்துள்ளது.

❖ ஸ்ரீ அனந்த்பூர் சாஹிப்பில் உள்ள ஜஜ்ஜர்-பச்சௌலி வனவிலங்கு சரணாலயத்தினை சுற்றுச்சூழல் சார் சுற்றுலா மையமாகவும், பஞ்சாப் மாநிலத்தில் சுற்றுப் பயணம் மேற் கொள்ளும் வகையிலான முதல் சிறுத்தைப் பூங்காவினையும் உருவாக்க பஞ்சாப் மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

❖ '2030 ஆம் ஆண்டு உலகளாவிய வன மேம்பாட்டுத் தொலைநோக்குத் திட்டம் (GFV): 2025 ஆம் ஆண்டில் அரசாங்கங்களுக்கான முன்னுரிமை நடவடிக்கைகள்' என்ற அறிக்கை சமீபத்தில் Forest Declaration Assessment எனும் அமைப்பினால் வெளியிடப்பட்டது.

❖ கடந்த 15 ஆண்டுகளில் சுமார் 320 சர்வதேச விளையாட்டுகளில் பங்கேற்பு மற்றும் 158 கோல்களுக்குப் பிறகு இந்திய மகளிர் ஹாக்கி வீராங்கனையான உத்தரகாண்டினைச் சேர்ந்த வந்தனா கட்டாரியா சமீபத்தில் ஓய்வு பெற உள்ளதாக அறிவித்துள்ளார்.

❖ பெல்ஜியம் நகரில் நடைபெற்ற புகழ்பெற்ற அசெல்ஹோஃப் CSI லியர் குதிரையேற்றப் போட்டியில் இளம் இந்தியக் குதிரையேற்றத் தடகள வீராங்கனையான நிஹாரிகா சிங்கானியா முதல் இடத்தைப் பிடித்துள்ளார்.

❖ பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (BSNL) கழகம் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தினை "வாடிக்கையாளர் சேவை மாதம்" என்று அறிவித்துள்ளது.

❖ பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஆனது, தெலுங்கானா மாநிலத்தின் அடிலாபாத் விமான நிலையத்தினைப் பொது விமான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கு கொள்கை ரீதியான ஒப்புதலை அளித்துள்ளது.

❖ ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் (SDSC) மூன்றாவது ஏவுதளத்தை (TLP) நிறுவுவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

❖ சுமார் 2,000 kN (கிலோ நியூட்டன்) அதிக உந்துதல் கொண்ட பகுதியளவு மீக்குளிர் நிலையிலான இயந்திரம் அல்லது திரவ ஆக்ஸிஜன் / மண்ணெண்ணெய் இயந்திரம் என்பதின் வடிவமைப்பு மற்றும் உருவாக்கத்தில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.
   - இது மார்க்-3 (LVM3) ஏவுதள வாகனத்தின் பகுதியளவு மீக்குளிர் நிலையிலான ஏவுகல உந்திகள் நிலைக்கு ஆற்றல் அளிக்கும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## நீலகிரியில் ஆறு புதிய முன்னெடுப்புகள்

❖ சுற்றுலாத் துறையை மிகவும் நன்கு மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் ஆறு புதிய முன்னெடுப்புகளைத் தமிழக முதல்வர் அறிவித்தார்.


❖ கூடலூரில் 26.6 கோடி ரூபாய் செலவில் 300 குடும்பங்களுக்கு வீடுகள் கட்ட அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்ற நிலையில் இது கலைஞர் நகர் என்று அழைக்கப்படும்.

❖ சுமார் 10 கோடி ரூபாய் செலவில் "பழங்குடியினர் அருங்காட்சியகம் மற்றும் ஆராய்ச்சி மையம்", 5 கோடி ரூபாய் செலவில் பத்து பேருந்துகளுடன் கூடிய "ஹாப்-ஆன், ஹாப்-ஆஃப்" இடை நிறுத்தச் சுற்றுலா சேவைகள், 20 கோடி ரூபாய் செலவில் ஒரு

புதிய பல்லடுக்கு வாகன நிறுத்த வசதி, நடுகாணியில் சுற்றுச்சூழல் சார் சுற்றுலா வசதிகள் மற்றும் ஆதிவாசிச் சமூகங்களுக்காக 23 சமூக அரங்குகள் மற்றும் சுமார் 200 வீடுகள் அமைப்பது ஆகியவற்றைக் கட்டமைப்பதற்கான ஒரு திட்டத்தினையும் அவர் அறிவித்துள்ளார்.




## புலம்பெயர்ந்தத் தொழிலாளர்கள் தொடர்பான திட்டமிடல் ஆணையம்





- மாநிலத் திட்ட ஆணையம் (SPC) நடத்திய ஆய்வில், புலம்பெயர்ந்தத் தொழிலாளர்கள் நீண்ட வேலை நேரங்களுக்கு உட்படுத்தப்படுகிறார்கள் என்பதைக் கண்டறிந்துள்ளது.
- அவர்களில் சுமார் 53% பேர் ஒரு நாளைக்கு எட்டு மணி நேரத்திற்கும் மேலாக வேலை செய்கிறார்கள்.
- கட்டுமானத் துறையில் உள்ள பெரும்பாலான புலம்பெயர்ந்தத் தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு சுமார் 10 மணி நேரம் வேலை செய்கிறார்கள்.
- உற்பத்தித் துறையில், அவர்களில் பாதி பேர் ஒரு நாளைக்கு எட்டு மணி நேரத்திற்கும் மேலாக வேலை செய்கிறார்கள்.
- சேவைத் துறையில், அவர்கள் ஒரு நாளைக்கு சுமார் 12 மணி நேரம் வரையில் வேலை செய்கிறார்கள்.
- இதில் கணக்கெடுக்கப்பட்டத் தொழிலாளர்களில் சுமார் 84% பேர் எந்த எழுத்துப்பூர்வ

ஒப்பந்தம் ஏதும் இல்லாமல் வேலை செய்கிறார்கள்.

❖ வருங்கால வைப்பு நிதி, சுகாதாரக் காப்பீடு மற்றும் ஊதியத்துடன் கூடிய மருத்துவ விடுப்பு போன்ற எந்த சமூகப் பாதுகாப்பு சலுகைகளையும் அவர்கள் பெறுவதில்லை.

# தேசியச் செய்திகள்

## குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் மசோதா 2025




❖ குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், 2025 ஆம் ஆண்டு குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் மசோதாவிற்கு ஒப்புதல் அளித்துள்ளதையடுத்து, தற்போது அது ஒரு சட்டமாக மாறியுள்ளது.

❖ இந்தச் சட்டம் ஆனது, இந்தியாவில் வெளிநாட்டினரின் குடியேற்றம், நுழைவு மற்றும் தங்குதலை ஒழுங்குப்படுத்துவதற்கு முயல்கிறது.

❖ இது 1920 ஆம் ஆண்டு கடவுச் சீட்டு (இந்திய நாட்டிற்குள் நுழைதல்) சட்டம், வெளி நாட்டினர் பதிவுச் சட்டம், 1939, வெளிநாட்டினர் சட்டம், 1946 மற்றும் குடியேற்றச் சட்டம், 2000 (போக்குவரத்து அமைப்புகளின் பொறுப்பு) ஆகிய சட்டங்களை ரத்து செய்கிறது.

❖ தற்போது, தேசியப் பாதுகாப்பு, இறையாண்மை, பொது சுகாதாரம் அல்லது வெளி நாட்டு உறவுகளுக்கு மிக அச்சுறுத்தலாகக் கருதப்பட்டால் ஒரு வெளிநாட்டினருக்கு இந்தியாவிற்குள் நுழைவு மறுக்கப்படலாம்.

❖ கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் மற்றும் பராமரிப்பு இல்லங்கள் போன்ற நிறுவனங்கள் வெளிநாட்டினர் குறித்தத் தகவல்களைக் குடியேற்ற அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும்.

## 2007 ஆம் ஆண்டின் மூத்தக் குடிமக்கள் சட்டம் குறித்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு 2025

❖ மூத்த குடிமக்கள் / முதியோர்கள் சட்டம் ஆனது, "தமக்குச் சொந்தமான ஊதியம் அல்லது தனக்கு என்று சொந்தமான ஒரு சொத்திலிருந்து" தங்களைப் பராமரிக்க முடியாதப் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகள் அல்லது உறவினர்கள் (சட்டப்பூர்வ வாரிசுகள்) மீது பராமரிப்பு வழக்குத் தொடர அனுமதிக்கிறது.

❖ "பெற்றோர்கள் ஒரு இயல்பு வாழ்க்கையை நடத்தக் கூடிய வகையில்" பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை அவர்களின் குழந்தைகள் அல்லது உறவினர்களின் ஒரு கடமையாக இச்சட்டம் நிர்ணயிக்கிறது.

- இந்த வழக்குகளை விசாரிக்க என பிரத்தியேக தீர்ப்பாயங்களுடன், பிறப்பிக்கப்பட்ட எந்தவொரு உத்தரவுகளுக்கும் எதிரான மேல்முறையீடுகளை உடன் விசாரிக்க மேல் முறையீட்டு தீர்ப்பாயங்களையும் இந்தச் சட்டம் நிறுவுகிறது.
- ஆனால் பராமரிப்பு வழங்கப்படாததற்காக அந்த முதியோர்கள் இந்தத் தீர்ப்பாயத்தை அணுகினால், அந்தச் சொத்தைப் பரிமாற்றம் அல்லது பரிசளித்தவை தொடர்பானப் பதிவு செல்லாது என்று அறிவிக்கப்படும்.
- இந்தச் சட்டம் ஆனது பெற்றோருக்குத் தங்கள் குழந்தைகளையோ அல்லது தங்கள் உறவினர்களையோ தங்கள் வீட்டிலிருந்து வெளியேற்றச் செய்யும் ஒரு உரிமையை மிக வெளிப்படையாக வழங்கவில்லை என்றாலும், சில சூழ்நிலைகளில் அத்தகைய வெளியேற்ற உத்தரவுகளை அனுமதிக்கும் வகையில் அச்சொத்துப் பரிமாற்றங்கள் தொடர்பான விதியை உச்ச நீதிமன்றம் விளக்கிக் கூறியுள்ளது.




## கடலோரக் கப்பல் போக்குவரத்து மசோதா, 2024

- இந்த மசோதாவானது, மிகவும் சிக்கனமான, நம்பகமான மற்றும் மிக நிலையான போக்குவரத்து முறையை ஊக்குவித்து, கடலோர வர்த்தகத்திற்கான ஒரு பிரத்தியேக சட்டப் பூர்வக் கட்டமைப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முன்மொழியப்பட்டுள்ள இந்தச் சட்டம் ஆனது 1958 ஆம் ஆண்டு வணிகக் கப்பல் போக்குவரத்து சட்டம் போன்ற முந்தையச் சட்டங்களில் உள்ள சில இடைவெளிகளை நிவர்த்தி செய்கிறது.
- இந்தியக் கடலோர நீர்நிலைகளுக்குள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள கப்பல்கள், படகுகள், பாய்மரக் கப்பல்கள் மற்றும் பல்வேறு இடங்களுக்கு இயங்கும் கடல் சார் கிணறு துளையிடும் அலகுகள் உள்ளிட்ட அனைத்து வகையான கப்பல்களையும் ஒழுங்குபடுத்த இந்த மசோதா முயல்கிறது.
- இந்த மசோதாவானது, இந்திய நிறுவனங்களின் பெயரில் இயங்கும் வெளிநாட்டுக் கப்பல்களை ஒழுங்குமுறைப்படுத்தவும் முயல்வதோடு பல்வேறு விதிமீறல்களுக்கான அபராதங்களையும் குறிப்பிடுகிறது.
- 2014-15 ஆம் ஆண்டில் சுமார் 74 மில்லியன் டன்களாக இருந்த கடலோரச் சரக்குப்

போக்குவரத்து ஆனது 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 162 மில்லியன் டன்களாக உயர்ந்து உள்ளதுடன் கடந்த பத்தாண்டுகளில் அது 119% அதிகரித்துள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பிளைண்ட்சைட் சில்லு 2025





- எலான் மஸ்க்கின் மூளை சில்லு உருவாக்கப் புத்தொழில் நிறுவனமான நியூராலிங்க், 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் பிளைண்ட்சைட் எனப்படும் அதன் செயற்கை காட்சி உருவாக்கக் கருவியினை முதல் முறையாக ஒரு மனிதனில் பொருத்துவதைப் பெரும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பிளைண்ட்சைட், இரண்டு கண்களையும் பார்வை நரம்பையும் இழந்தவர்கள் கூட பார்க்க உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது ஒளிப்படக் கருவியிலிருந்து அனுப்பப்படும் வடிவங்களின் ஒரு அடிப்படையில் காட்சிப் (காட்சி உணர்வு) புறணியில் அமைந்துள்ள நியூரான்கள் அல்லது அதன் நரம்பு செல்களைத் தூண்டும் திறன் கொண்டது என்று கூறப்படுகிறது.

## சூரியனில் இரும்பு கண்டுபிடிப்பு - சமீபத்திய ஆய்வு

- சூரியனின் நிறையில் சுமார் 0.14% இரும்பு (Fe) காணப் படுகிறது என்பதோடு இது ஹைட்ரஜன் (~74%) மற்றும் ஹீலியம் (~24%) ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது ஒரு சிறிய

பகுதியாகும்.

- இரும்பு ஆனது பெரும்பாலும் சூரியனின் மையம் மற்றும் வெளிப்புற அடுக்குகளில் (ஒளியடுக்கு, சுடரொளி மண்டலம்) அயனியாக்கப்பட்ட வடிவங்களில் நன்கு காணப் படுகிறது.
- சூரியனில் காணப்படும் இரும்பு ஆனது முந்தையத் தலைமுறை நட்சத்திரங்களில் நிகழ்ந்த அணுக்கரு இணைவிலிருந்து வந்துள்ளன.
- இரும்பின் ஒளிபுகாநிலை சூரியனுக்குள் வெப்பநிலை, அடர்த்தி மற்றும் இணைவு விகிதங்களைப் பாதிக்கிறது.




## Fram2 திட்டம்





- தனியார் நிறுவனத்தின் பெரும் நிதியுதவி மூலம் மேற்கொள்ளப்பட்ட Fram2 மனித விண்வெளிப் பயணம் ஆனது, அதன் பயணத்தினை மிக வெற்றிகரமாக முடித்து அமெரிக்காவின் கலிபோர்னியா கடற்கரையில் தரையிறங்கியது.
- "ரெசிலியன்ஸ்" எனப்படும் விண்வெளி வீரர்களின் ஒரு பயணப் பெட்டகத்துடன் கூடிய இந்தக் கலமானது ஃபால்கன் 9 ஏவுகலம் மூலம் துருவ சுற்றுப்பாதையில் ஏவப்பட்டது.
- இந்த ஆய்வுப் பயணத்திற்கு நான்கு விண்வெளி வீரர்கள் கொண்ட ஒரு சர்வதேசக்

குழுவினர் வழி நடத்தினர்.

- அவர்களின் நான்கு நாட்கள் அளவிலான பயணத்தின் போது, விண்வெளியில் மனித குலத்தின் நீண்ட கால நீடிப்புத் திறன்களை நன்கு மேம்படுத்த உதவும் வகையில் வடிவமைக்கப்பட்ட 22 ஆராய்ச்சி ஆய்வுகளை அக்குழுவினர் நடத்தினர்.
- இக்குழுவினர் விண்வெளியில் முதல் ஊடு கதிர் (X-Ray) ஆய்வினை மேற்கொண்டனர் என்ற நிலையில் இது நுண் ஈர்ப்பு விசையானது எலும்பு மற்றும் தசைகளின் மீதான அடர்த்தியை எவ்வாறு பாதிக்கிறது என்பது பற்றிய தகவல்களை வழங்கியது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## உலகளாவிய ஏரிகளில் ஆக்ஸிஜன் நீக்க நிகழ்வு நெருக்கடி




- நீண்ட காலப் புவி வெப்பமடைதலுடன் கூடிய குறுகிய கால வெப்ப அலைகள் ஆனது, உலகம் முழுவதும் உள்ள ஏரிகளின் மேற்பரப்பில் பரவியுள்ள நீர்மத்தில் கரைந்துள்ள ஆக்ஸிஜனின் (DO) அளவைக் குறைக்கின்றன.
- உலகளவில் உள்ள ஏரிகளில் காணப்படும் சராசரி ஆக்ஸிஜன் இழப்பு விகிதம் என்பது கடல்கள் மற்றும் ஆறுகளில் காணப்படுவதை விட விரைவாக உள்ளது.
- புவி வெப்பமடைதல் காரணமாக நீரின் கரைதிறன் குறைவது உலகளாவிய ஏரிகளில் 55 சதவீத மேற்பரப்பு ஆக்ஸிஜன் இழப்பிற்குக் காரணமாகிறது.
- 10 சதவீத மேற்பரப்பு ஆக்ஸிஜன் இழப்பிற்கு ஊட்டச்செறிவு காரணமாகும்.
- ஆப்பிரிக்கா, ஆசியா, ஓசியானியா மற்றும் தென் அமெரிக்காவுடன் ஒப்பிடும் போது ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவில் ஆக்ஸிஜன் நீக்கம் மிக விரைவாக நிகழும் என்று கணிக்கப்பட்டுள்ளது.


# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## புனைவுக் கதை சாராதப் புத்தகங்களுக்கான மகளிர் பரிசு 2025

- பல்வேறு கருப்பொருள்களைச் சேர்ந்த புனைவுக் கதை சாராதப் புத்தகங்களுக்கான 2025 ஆம் ஆண்டு மகளிர் பரிசுக்கு ஆறு புத்தகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- இது பெண்களின் மகத்தான புனைவுக் கதை சாராத கதை விவரிப்புத் திறனைக்

கொண்டாடும் வருடாந்திரப் புத்தகப் பரிசாகும்.

- ❖ இந்தப் பரிசு ஆங்கில மொழியில் புத்தகம் எழுதி ஐக்கியப் பேரரசில் வெளியாகும் உலகின் அனைத்து நாட்டுப் பெண் எழுத்தாளர்களுக்கும் வழங்கப்படும்.




# இதரச் செய்திகள்

## முதலாம் தேவராயரின் ஆட்சிக் கால செப்புத் தகடுகள்




- ❖ சங்கம வம்சத்தைச் சேர்ந்த முதலாம் தேவராயரின் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த 15 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்தச் செப்புத் தகடுகளின் தொகுப்பு ஆனது இந்தியத் தொல்லியல் துறையினால் வெளியிடப்பட்டுள்ளது.
- ❖ சமஸ்கிருதம் மற்றும் கன்னடம் மற்றும் நாகரி எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ள இவை மன்னர் முதலாம் தேவராயரின் முடிசூட்டு விழாவின் போது வெளியிடப்பட்டதால் ஒரு தனித்துவமானதாகக் கருதப்படுகிறது.

- முக்கியமாக, இந்த முத்திரையில் விஜயநகரப் பேரரசின் அரச சின்னமாக விளங்கிய வழக்கமான வராஹுருக்குப் பதிலாக வாமனரின் உருவம் இடம்பெற்றுள்ளது.
- இந்த செப்புத் தகடுகள் 1406 கி.பி. ஆண்டின் நவம்பர் 05 ஆம் தேதிக்கு இணையான சாகா 1328 (நாக-சக்சு-குண சசி), வியாயா, கார்த்திகா பா. தசமி (10), வெள்ளிக்கிழமை என்று தேதியிடப்பட்டுள்ளன.

## NCPOR மையத்தின் 25 ஆம் ஆண்டு நிறைவு

- தேசியத் துருவ மற்றும் பெருங்கடல் ஆராய்ச்சி மையம் (NCPOR) ஆனது கோவாவின் வாஸ்கோடகாமாவில் அமைந்துள்ளது.
- NCPOR ஆனது, ஆர்க்டிக், அண்டார்டிக் மற்றும் இந்தியப் பெருங்கடலில் இந்தியா மேற் கொண்டுள்ள ஆய்வுகளை முன்னெடுத்து, துருவ மற்றும் கடல்சார் அறிவியலில் அதி நவீன ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளது.
- மைத்ரி (1989) மற்றும் பாரதி (2011) ஆகியவை இந்திய அறிவியலாளர்கள் துருவ ஆராய்ச்சியின் அனைத்துத் துறைகளிலும் ஆராய்ச்சியை மேற்கொள்வதற்காக என்று நிறுவப் பட்டன.
- இது முக்கியமானப் பருவநிலை மற்றும் பெருங்கடல் ஆய்வுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக என இமயமலையில் HIMANSH எனப்படும் உயரமான பகுதியில் உள்ள ஆராய்ச்சி நிலையத்தினை (2016) நிறுவியது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★